THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

NINTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

Monday, 8th August 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

MR. SPEAKER : உங்கள் எல்லோரையும் இந்தக் கூட்டத்திற்கு நான் வரவேற்கிறேன்.

I.—OBITUARY REFERENCE TO SRI D. SRINIVASA AYYAR.

MR. SPEAKER: 1937-ம் ஆண்டிலிருந்து 1939-ம் ஆண்டு வரைக்கும் சென்னை சட்டசபை அங்கத்தினராக இருந்த ஸ்ரீ. டி. ஸ்ரீநிவாச அய்யர் அவர்கள் கோபிசெட்டிபாளையத்தில் இறந்து விட்டார் என்ற செய்தியை நான் மிகவும் வருத்தத்துடன் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவருக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒரு நிமிஷம் மௌனமாக எழுந்து நிற்க வேண்டுமென்று உங்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[சபை அங்கத்தினர்கள் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக நின்றார்கள்.]

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் இடத்தில் இல்லாததால் 1-வது கேள்வியும் அதற்கான பதிலும் சட்டசபையின் விவாத வெளியீட்டில் அச்சிடப்படும்.

Revenue villages and lands in Javadu hills.

*1 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

ஜவ்வாது மலையிலுள்ள ரெவின்யு கிராமங்களையும் நிலங்களையும் காட்டு இலாகாவினரிடம் ஒப்படைக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is presumed that the hon. Member is referring to Javadu hills in the North Arcot district. If so, the proposal of the Collector of North Arcot for the transfer of the administration of thirty-three villages on Javadu and Elagiri hills of North Arcot district from the Revenue to the Forest department is under the consideration of the Board of Revenue (Land Revenue).